1972 மார்ச் 1]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்பொழுது இருக்கும் கட்டடத்தையே பழுதுபார்த்து சீர் செய்தால், அதுவே நீண்ட நாட்களுக்கு உபயோகப்படுத்த முடியும் என்று அரசாங்கத்திற்குத் தெரிகிறது.

கிரியாறுத் திட்டம்

* 270 **வினா—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'கிரியாறுத் திட்டம்' இப்பொழுது அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

தமிழ் நாட்டில் புதிய வேளாண்மைக் கல்லூரிகள்

* 271 **வினா—திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மேலும் புதிய வேளாண்மைக் கல்லூரிகள் திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை

* 272 **வினா—திரு. க. சுப்பு** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அவர்களுடைய இன்றியமையாத கல்வித் தேவையை அடிப்படையாகக் கொண்டு உதவித் தொகைகள் வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?